பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பத்திரகிரியாரின் மெய்ஞானப் புலம்பல்

60

நா.சௌமியா[1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]

[1] முதுகலை முதலாமாண்டு தமிழ், [2] இணைப்பேராசிரியர்

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043

மின்னஞ்சல் – sowmiya0475@gmail.com, priyadharshini_tam@avinuty.ac.in

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கியங்களில் பல இலக்கிய வகைகள் உள்ளன. அவ்விலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இலக்கியமாக கருதப்படுவது சித்தர் இலக்கியம் ஆகும். சித்தர் இலக்கியத்தில் பல சித்தர்களின் வாழ்வியலும்,தத்துவமும், அவர்களின் தனிச்சிறப்பும்,சித்தமருத்துவ நெறிமுறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சித்தர்களில் பதினெண் சித்தர்கள் மிகவும் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர். சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள் மற்றும் வீட்டின்பம் அடைந்தவர்கள் என கூறப்படுகிறது. சமண மதத்திலும் , புத்த மதத்திலும் சித்தர்களை சாரணர் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவு வரை சித்தர்களின் வாழ்க்கை நெறியானது பின்பற்றப்படுகிறது. எண்ணில் அடங்காத சித்தர்கள் இவ்வுலகில் வாழ்ந்துள்ளனர் எனக் கூறலாம். ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு குறிப்பை மக்களுக்கு எடுத்துரைக்கின்றனர். அவர்களின் குறிப்புகளை இக்காலத் தலைமுறையினர் பின்பற்றுகின்றனர். சித்தர்களின் தத்துவமானது அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. சித்தர்களுடைய தத்துவத்தை எடுத்துரைப்பது என்னவென்றால் பிறவி என்ற ஒன்று இருந்தால் மறுபிறவி என்பதும் உண்டு எனக் கூறுகின்றனர். ஒருவரின் மரணத்தை அவரே தீர்மானிக்க வேண்டும் என சித்தர்கள் எடுத்துரைக்கின்றனர். பத்திரகிரியாரின் ஒவ்வொரு கருத்தும் பிறப்பு முதல் இறப்பு வரை நாம் நன்மை செய்வது எக்காலம் என கேள்வி கேட்பது போல் அமைந்திருக்கும் ஞானக்கருவூலம்ஆகும். மனித குலத்தின் சார்பில் பத்திரிகிரியார் தாமே புலம்புவதாக பதிவு செய்துள்ள பாடல்களையும், தத்துவங்களையும் தனித்தன்மைகளையும், ஆராய்வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** யோகநெறி - முக்தி - ஞான மொழி – துரியாதீதம் - மெய்ஞானம்

**முன்னுரை :**

தமிழ்மொழியின்தொன்மைக்காலம் மற்றும் தொன்மை நூலான தொல்காப்பியம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல இலக்கியங்கள்வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றுதான் சித்தர் இலக்கியம் ஆகும். உடல்நலம், மனநலம், யோகம், வானியல் அறிவு,

ஜோதிடம் என பல துறைகள் சார்ந்த சிந்தனைகளை தம் பாடல்களில் கூறிச் சென்றுள்ளனர் சித்தர்கள். இன்றைய கொரோனா என்னும் பெருந்தொற்று நோய்க்கும் கூட நம்முடைய சித்தர்கள் கூறிச் சென்ற கருத்துக்கள் பெரிதும் உதவி செய்துள்ளனஎனலாம். பல மருத்துவ குறிப்பாகவே உள்ளது. பத்திரகிரியார் பட்டினத்தாரின் சீடர் ஆவார். இந்த உலக மோக வாழ்வைத் துறந்து இறைவனடி சேரும் காலம் எக்காலம் என்றும், அந்தக் காலம் விரைவில் வாராதா என்று ஏங்கும் சித்தர்தான் பத்திரகிரியார் ஆவார்.அச்சித்தர் இறைவனடியை சேரும் காலத்தை நினைத்து ஏங்குவதாகஅமைகின்றது.

**சித்தர்களின் வாழ்வு:**

சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். சித்தி என்றால் அறிவு என்பதாகும். இவர்களை அறியர் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

*மறுவில் செய்தி மூவகைக் காலமும்*

*நெறியின் ஆற்றிய அறிவன் நேரம். (தொல்.புறத்திணை-75)*

சித்தி என்பது எட்டு வகைப்படும். அவை அட்டமா சித்திகள் என்று அழைக்கப்படுகிறது.

- **அணிமா-** அணுவைப் போல் சிறியதாதல்.
- **மகிமா-** மலை போல் பெரியதாதல்
- **இலகிமா-** காற்றைப் போல் இலேசாதல்
- **கரிமா** - மலை போல் கடினமாதல்
- **பிராப்தி-** எல்லாவற்றையும் ஆளுதல்
- **வசித்துவம்-** எல்லாரையும் வசப்படுத்துதல்
- **பிராகாமியம்-** கூடு விட்டு கூடு பாய்தல்
- **ஈசாத்துவம்-** விரும்பியதைச் செய்தல்

என இவை எட்டு சித்து வேலைகளையும் செய்பவர்கள் சித்தர்கள் ஆவர். மனித வாழ்க்கையில் பயனும் பற்றும் ஏற்படுத்த யோகக் கலையினை அர்ப்பணித்தனர் சித்தர்கள். இந்த மானிட உலகில் சித்தர்கள் மட்டுமே அவர்களின் மரணத்தை அவர்களே தீர்மானிக்க முடியும். பல சித்தர்கள் அவர்களின் இறப்பை அவர்களே ஏற்படுத்திக் கொண்டனர் எனலாம். சித்தர்களின் கருத்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதாகும்.

**பத்திரகிரியார்:**

பத்திரகிரியார் பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் உஜ்ஜைனியின் மாகாளம் என்ற பகுதியில் அரசராக இருந்தவர். பத்திரகிரியாரின் இயற்பெயர் பத்ருஹரி ஆகும். பத்திரகிரியாரின் குரு பட்டினத்தார் ஆவார்.

பட்டினத்தார் உஜ்ஜையனி நாட்டு பகுதியான மாகாளபுரத்திற்குச் சென்று மாகாளேசுவர் சுவாமியே வணங்கி விட்டுச் செல்லும்போது இளைப்பார ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். அரசர் பத்திரிகிரியாரின் அரண்மனையில் கொள்ளையடித்த கள்வன்

முத்துமாலையைக் கொள்ளை அடித்துக் கொண்டு வந்து பட்டினத்தாரின் மீது வீச அம்மாலை அவரின் கழுத்தில் சென்று விழுந்தது. கொள்ளை அடித்தது அவரென நினைத்து உண்மையறியாமல் பத்திரகிரியார் அவரை கழுமரத்தில் ஏற்ற உத்தரவிட்டார். பட்டினத்தாரை கழுமரத்தில் இயற்றிய பின் கழு மரம் தானாக எரிந்தது. அதைக் கண்ட பத்திரகிரியார் அதிர்ச்சி அடைந்தார். பட்டினத்தாரின் மீது கொண்ட பக்தியால் தன் அரச போகங்களைத் துறந்து துறவியாக பட்டினத்தாருடன் சென்றார். அரசனாக இருந்து பட்டினத்தாரின் சித்தருமை தெரிந்த நொடியில் அவருடைய சீடராகிச் சென்றவர் பத்திரகிரியார் ஆவார். இருவரும்திருவிடைமருதூரில் பிச்சை எடுத்து உண்டனர். அப்போது தன் குரு உண்டு கொடுத்த மீத உணவை உண்டு பத்திரகிரியார் வாழ்ந்தார். தனக்கு கிடைத்த உணவில் இருந்து பாதியை தன் அருகில் இருந்த நாய்க்கு உணவாக அளித்தார். அதன் பின்பு அந்த நாய் தனது இறுதி காலம் வரை அவர் உடனே இருந்தது. ஒரு நாள் பிச்சை ஏந்தி ஒருவன் பட்டினத்தாரிடம் வந்து பிச்சை கேட்கும்போது அவர் கிழக்கு வாசலில் குடும்பஸ்தன் ஒருவன் இருக்கிறான் அவனிடம் போய் கேட்பாயாக என அவர் கூறினார். அவனும் சென்று பத்திரகிரியாரிடம் குடும்பஸ்தனாகிய உன்னிடம் பட்டினத்தார் உணவு கேட்குமாறு என்னை அனுப்பினார் என்று கூறியவுடன் பத்திரகிரியார் அதிர்ச்சி அடைந்தார்.

பட்டினத்தார், தன் கையில் இருக்கும் தட்டு மற்றும் அருகில் இருக்கும் நாயை வைத்து குடும்பஸ்தன் என கூறியிருக்கிறார் என அறிந்ததும் பத்திரகிரியார் கோபம் அடைந்து தன் கையில் இருக்கும் தட்டினை வீசி எறிந்தார். அப்போது அந்தத் தட்டானது நாயின் மீது விழுந்து நாய் இறந்து விட்டது. அந்த நாய் மறுபிறவி எடுத்து காசிராஜாவின் மகளாகப் பிறந்து வளர்ந்து திருமண வயது ஆனவுடன் பத்திரகிரியாரை தேடித் திருமணம் செய்து கொள்ள வந்தாள். பத்திரகிரியாவிடம் வந்து நான் முன்பிறவியில் உங்களுடைய மீதி உணவை உண்டு வாழ்ந்த நாயாவேன் என கூறியதை கேட்ட பத்திரகிரியார் அங்கு வந்து நின்றார். அப்போது அந்தப் பெண் எனக்கு முக்தி கிடைத்து இருக்க வேண்டுமே பிறவி எப்படி வாய்க்கலாம் என்று முறையிட்டாள்.

பத்திரகிரியார் மருதூர் இறைவனிடம் முறையிட அங்கே உருவான ஜோதியில் பத்திரகிரியாரும் அந்த பெண்ணும் முக்தி பெற்றனர். பத்திரகிரியார் அரசராக இருந்தாலும் சிவபக்தியில் சிறந்தவர். இவருடைய பாடலான மெய்ஞான புலம்பல் மிகவும் புகழ்பெற்றவை ஆகும்.

**பத்திரகிரியாரின் பாடல் அமைப்பு:**

பத்திரகிரியார் அருளிச் செய்தது மெய்ஞானப் புலம்பலாகும். இந்நூல் கண்ணி வடிவில் அமைந்திருக்கும். கண்ணிகள் என்றால் இரு வரி வடிவில் அமையும் பாடல் அமைப்பாகும். மெய்ஞானப் புலம்பலில் 231 கண்ணிகள் உள்ளன. எல்லா கண்ணிகளும் "எக்காலம்?" என்ற கேள்வியுடன் முடிகிறது. இந்த உலக மோக வாழ்வைத் துறந்து இறைவனின் திருவடியை சேரும் காலம் எக்காலம் என்றும், அந்தக் காலம்உடனே வராதா என்று ஏங்கும் சித்தர் பத்திரகிரியார் ஆவார்.

*"முத்தி தரும் ஞான மொழியாம் புலம்பல் சொல்ல*

*அந்தி முகவன் தன் அருள் பெறுவ தெக்காலம்?" (காப்பு) (பத்திர.பா-1)*

எக்காலம் என்று முடிகிற அடிகளால் அமைந்ததால் காப்புச் செய்யுளுமே அவ்வாறு முடிகிறது. வேத மொழியான புலம்பல் என்ற முறையில் திருமுறை ஞானமும் புலம்பலுமாக இப்பாடல்கள் நடக்கின்றன. முத்தி தரக்கூடிய ஞான கருத்துக்களைக் சொல்வதற்கு அத்திமுகனாகிய ஆனைமுக கடவுள் அருள் செய்வாயாக எனப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மெய்ஞானப் புலம்பல்:**

மெய்ஞானப் புலம்பல் என்பது பத்திரகிரியார் என்ற சித்தரால் 14ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட பாடல்கள் ஆகும். இந்த நூல் 231 கண்ணிகளைக் கொண்டது. இந்த கண்ணிகளின் வழியாக பல மெய்யியல் கருத்துக்கள் கூறப்படுகின்றன. இக்கண்ணிகள் மிக எளிய வார்த்தைகளையும் ஆழமான அர்த்தங்களையும் கொண்டிருக்கும் எனலாம்.

*"வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே*

*ஏகாந்தமாக இருப்பதினி எக்காலம்?" (பத்திர.பா-33)*

சாத்திரக் கல்விகளை விட்டு ஏகாந்த நிட்டை கூடுவது எப்போது? என பத்திரகிரியார் கேள்வி எழுப்புகிறார்.

*"மனதைஒரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி*

*எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?" (பத்திர.பா-163)*

பரம்பொருளை குறிவைப்பதற்கு அறிவை அம்பாகவும், மனதை வில்லாகவும், நானே பொறியாகவும் இயங்க வேண்டும்.

*"அறிவையறி வாலறிந்தே அறியும் அறிவுதனில்*

*பிறிவுபடநில்லாமல் பிடிப்பதினி எக்காலம்?"(பத்திர.பா-194)*

அறிவில் அறிவு அடங்கும் முறை பற்றி பத்திரகிரியார் இப்பாடலில் எடுத்துரைக்கிறார்.

இக்கண்ணிகள் மெய்ஞானம் குறித்த ஆன்மீகத் தேடலை வெளிப்படுத்துவதோடு மெய்ஞானம் அடையும் வழிகளையும் மிகத்தெளிவாய்எடுத்துரைக்கிறது.

**பத்திரகிரியாரின் நெஞ்சுருக்கும் கண்ணிகள்:**

பத்திரகிரியாரின் மெய்ஞானப் புலம்பல் எனும் நூல் பல கருத்துக்களையும் தத்துவங்களையும் எடுத்துரைக்கிறது. இரு அடிகளில் அமைந்த ஒவ்வொரு கண்ணியும் ஒவ்வொரு கருத்தை வெளிப்படுத்துகிறது. சில கண்ணிகள் நெஞ்சை உருக்கும் வகையில் பதிவுச்செய்யப்பட்டுள்ளது.

*"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து*

*தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்?"(பத்திர.பா-2)*

அகங்காரம் வெளிப்படாதபடி பணிவுடன் நடந்து ஐந்து புலன்கள் இழுக்கும் மாய வழிகளில் விரும்பிச் செல்லாது தூங்காமல் தூங்கும் யோக நெறியாகிய துரியம் மற்றும் துரியாதீதம்

ஆகியவற்றைச் செய்து இன்பம் காண்பது எக்காலமோ?

*"தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே*
*சிந்தைத்தனிற் கண்டு திருக்குஅறுப் தெக்காலம்?" (பத்திர.பா-14)*

தந்தை, தாய், மக்கள், உடன்பிறந்தார் முதலிய சுற்றத்தார் யாவரையும் பொய் என கருதி மனதில் தெளிவு கண்டு, மன மயக்கத்தை நீக்குவது எக்காலமோ?

*"ஆமை வரும்ஆள்கண்டு ஐந்தடக்கஞ் செய்தாற்போல்*
*ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம்." (பத்திர.பா-20)*

ஆமை பிறர் தன்னை நெருங்குவதை பார்த்து ஐந்து உறுப்புகளையும் தன் ஓட்டில் மறைத்துக் கொள்வது போல, ஐந்து புலன்களையும் அடக்கி கொண்டு ஏதும் பேசாது மனம் ஒடுங்குவதும் எக்காலமோ?

**தொகுப்புரை:**

உலகநலனுக்காகச் சித்தர்கள் தங்களுக்கென எவ்வித நெறிமுறைகளையும் உருவாக்க உருவாக்கவில்லை. அவர்கள் மக்களின் நலனைகருத்தில் கொண்டு மக்களுக்கானவாழ்வியல் ஒழுக்கங்களையும் யோகப் பயிற்சி முறைகளையும் எடுத்துரைத்து வழிகாட்டுவதாகஅமைகிறது. சித்தர்கள் தங்களின் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்துள்ளனர். பத்திரகிரியார் இறைவனின் திருவடிகளை சரண்அடைவதுதான் வாழ்க்கையின் குறிக்கோளாகும் என்பதை உணர்த்துகிறார்.

**துணைநூற்பட்டியல் :**

1.இரா.திருமுருகன் – சித்தர் பாடல்கள்

2.மானோஸ் – சித்தர் பாடல்கள் (பூங்கொடி பதிப்பகம்).

3.முனைவர்.ஆ.கருணாநிதி – சித்தர் இலக்கியங்களில் சமூகப் பார்வை.

4.ஜெகதா - சித்தர்களின் வாழ்வும் வாக்கும் (ராமையா பதிப்பகம்-சென்னை)

5.ஹரி விஜயலட்சுமி - தமிழ் இலக்கிய வரலாறு.